
# ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷன்


ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷனின் அறிகுறிகள், தடுப்பு மற்றும் சிகிச்சை.



## கண்

நமது உடலில் நமது கண் மிகவும் சிக்கலான உறுப்பு என்று குறிப்பிடப்படுகிறது.


கார்ணியா எனப்படும் திரை மூலம் ஒளி உள்ளே நுழைந்து கண்மணியின் திறப்பின் வழியாக கடக்கிறது மற்றும் பின்பு லென்ஸ்-ஐ சென்றடைகிறது. லென்ஸ் கண்ணின் பின்புறம் உள்ள உட்புற தசை சுவரான விழித்திரை மீது ஒளியை குவிக்கிறது.





## விழித்திரை

ரெடினா எனப்படும் விழித்திரையில் வரிசையாக ஒளியை உணரும் செல்கள் அல்லது ஃபோட்டோரிசப்டார்கள் எனப்படும் ராடுகள் மற்றும் கோன்கள் உள்ளன. விழித்திரையின் மத்தியில் மாக்குலா உள்ளது மற்றும் இதுவே கூரான மையப் பார்வைக்கு பொறுப்பாகிறது. மாக்குலாவில் உள்ள சிறிய அழுத்தமான ஃபோவியா மிக துல்லியமான பார்வையை அளிக்கிறது.


ஒளி விழித்திரையை அடைந்ததும் ஃபோட்டோ ரிசப்டார்கள் மூளைக்கு பார்வை நரம்புடன் சமிக்ஞை துடிப்புகளை அனுப்புகின்றன. மூளை அதை பார்வையாக மாற்றுகிறது.






## ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷன் (ஆர் வி ஓ) என்றால் என்ன?

ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷன் என்பது சிலசமயம் 'கண் பக்கவாதம்' என்று குறிப்பிடப்படுகிறது. இது, உங்கள் விழித்திரையிலிருந்து உங்கள் இதயத்திற்கு இரத்தத்தை திரும்பக் கொண்டு செல்லும் நரம்புகளில் ஒன்றில் அடைப்பு ஏற்படும் நிலையாகும். உங்கள் விழித்திரை நரம்புகளில் உருவாகும் இரத்த உறைவுகள் அல்லது திரவம் சேர்தல் காரணமாக ஏற்படும் அடைப்புகள், வெளிச்சத்தை வடிகட்டும் உங்கள் விழித்திரையின் திறனையும், பார்வைத் திறனையும் சேதப்படுத்துகிறது. பார்வையிழப்பின் கடுமைத்தன்மையானது, எந்த நரம்பில் அடைப்பு ஏற்பட்டுள்ளது என்பதைப் பொறுத்திருக்கும்.





## ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷன் வகைகள்

இரண்டு வகை விழித்திரை நரம்புகள் (ரெட்டினல் வெய்ன்கள்) உள்ளன. ஒரு மத்திய நரம்பு மற்றும் பல சிறிய கிளை நரம்புகள் உள்ளன. ஒரு விழித்திரை நரம்பில் அடைப்பு ஏற்படும் போது, விழித்திரையிலிருந்து இரத்தத்தை அதனால் திரும்ப எடுத்துச் செல்ல முடிவதில்லை. இது அடைப்பு ஏற்பட்டுள்ள இரத்த நாளங்களில் ஹெமரேஜ் (இரத்தப்போக்கு) மற்றும் திரவம் ஒழுகுதலுக்கு வழிவகுக்கிறது.

இரண்டு வகை ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷன் உள்ளன: சென்ட்ரல் ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷன் (சி ஆர் வி ஓ) - மத்திய விழித்திரை நரம்பில் ஏற்படும் அடைப்பு. பிராஞ்ச் ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷன் (பி ஆர் வி ஓ) - சிறிய கிளை நரம்புகள் ஒன்றில் ஏற்படும் அடைப்பு.

## அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்

ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷனின் முக்கிய அறிகுறி, பார்வை மங்குதல் அல்லது பார்வையிழப்பு. இது வழக்கமாக திடீரென்று ஏற்படுகிறது மற்றும் பொதுவாக ஒரு கண்ணில் மட்டுமே ஏற்படுகிறது.



இயல்பான பார்வை




மங்கலான பார்வை



உருக்குலைந்த பார்வை


## ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷன் (ஆர் வி ஓ) எதனால் ஏற்படுகிறது?



அத்திரோஸ்க்ளிரோஸிஸ்



புகைப்பிடித்தல்




கிளாக்கோமா



உயர் இரத்த அழுத்தம்




மேக்யுலர் எடிமா



டயபெட்டீஸ்



உயர் கொலஸ்ட்ரால்




இரத்த உறைவு கோளாறுகள்

# ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷனை எவ்வாறு நிர்வகிப்பது?

## நோய் கண்டறிதல்:

பார்வை மற்றும் அழுத்த பரிசோதனைகள், மற்றும் உங்கள் கண்ணின் மேற்பரப்புகள் மற்றும் நாளங்கள் பரிசோதனை போன்றவை அடங்கிய ஒரு முழுமையான கண் பரிசோதனை மூலம் இந்நோய் கண்டறியப்படுகிறது. ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷனை கண்டறிவதற்கான இதர பரிசோதனைகளில் அடங்குபவை:




## ஆஃப்தால்மோஸ்கோபி

ஆஃப்தால்மோஸ்கோப் என்றழைக்கப்படும் ஒரு கருவியின் மூலம் விழித்திரையை பரிசோதனை செய்தால், ஆர் வி ஓ காரணமாக ஏற்பட்டுள்ள மாற்றங்களை கண்டறியலாம்.

## ஆப்டிகல் கொஹரன்ஸ் டோமோகிராஃபி (OCT)

இது, 5 மைக்ரான் ரெஸொல்யூஷன் கொண்ட ஒரு ஸ்கேனிங் ஆஃப்தால்மோஸ்கோப் கருவியினால் எடுக்கப்பட்ட விழித்திரையின் உயர் டெஃபனிஷன் படமாகும். உங்கள் விழித்திரையின் தடிமனை அளவிடுவதன் மூலம், வீக்கம் மற்றும் எடீமா இருப்பதை இந்தப் படங்கள் நிர்ணயிக்கும். உங்கள் சிகிச்சைக் காலம் முழுவதும் உங்கள் மருத்துவர் இந்த ஓ சி டி படங்களைப் பயன்படுத்தி, நோய் வளர்ச்சியை மதிப்பிட்டு ஆவணப்படுத்துவார்.





## ஃபண்டஸ் ஃபுளோரஸீன் ஆஞ்ஜியோகிராஃபி (FFA)

இது ஒரு பரிசோதனை செயல்முறையாகும். இதில் கையின் மேற்புரத்தில் உள்ள ஒரு நரம்பில் செலுத்தப்பட்ட ஒரு டை, விழித்திரை இரத்த நாளங்களுக்கு செல்கிறது. கண் மருத்துவர் நாளங்களைக் காண இந்த விசேஷ புகைப்படங்கள் உதவுகின்றன.




## சிகிச்சை:

### வி ஈ ஜி எஃப்-க்கு எதிரான இஞ்ஜெக்ஷன் தெரபி



வி ஜி ஈ எஃப்-க்கு எதிரான மருந்துகள், வி ஈ ஜி எஃப்-ஐ (வாஸ்குலர் எண்டோதீலியல் குரோத் ஃபேக்டர்) இலக்காகக் கொண்டு அவற்றை தடுக்கின்றன. விழித்திரையில் வி ஜி ஈ எஃப் குறைந்தளவில் இருப்பது, விழித்திரை இரத்த நாளங்கள் மீதான அவற்றின் விளைவுகளைக் குறைக்கிறது. இதன் மூலம், மேக்யுலர் எடீமா மற்றும் அசாதாரண நாளங்கள் வளர்ச்சி போன்ற இதர சிக்கல்கள் ஏற்படுவது குறைகிறது. வி ஜி ஈ எஃப்-க்கு எதிரான மருந்துகள், பல ஆர் வி ஓ நோயாளிகளின் மேக்யுலர் எடீமாவிற்கு சிகிச்சையளிப்பதில் செயல்திறன் மிக்கதாக விளங்கி, இதர பெரிய கண் நிலைகள் ஏற்படும் அபாயமில்லாத விதத்தில் பார்வைக் கூர்மையை மேம்படுத்திக் காண்பித்துள்ளன.





### கார்ட்டிகோஸ்டிராய்டு தெரபி

ஸ்டிராய்டுகள் நாளத்தின் சுவற்றை உறுதிப்படுத்தி, நாளத்தின் ஊடுருவல் தன்மையை (வாஸ்குலர் பர்மியபிலிட்டி) குறைக்கும். இதனை இன்ட்ராவிட்ரியல் ஊசியாக அல்லது சஸ்டெய்ன்டு-ரிலீஸ் இம்ப்ளான்ட் ஆக கொடுக்கலாம்.

### லேஸர் ஃபோட்டோகோயாகுலேஷன்

கிரிட் லேஸர் ஃபோட்டோகோயாகுலேஷன், மேக்யுலர் எடீமாவிற்கு சிகிச்சையளிப்பதில் செயல்திறன் வாய்ந்ததாக இல்லை, சிகிச்சை பெறாத நோயாளிகளை ஒப்பிட்டால் இது பார்வைக்கு பலனளிப்பதில்லை, அதனால் சி.ஆர்.வி.ஓ நோயாளிகளுக்கு இது பரிந்துரைக்கப்படுவதில்லை.




### வழக்கமான பராமரிப்பு

இது நரம்புகளில் ஏற்படுவதால், உங்கள் இரத்த நாளங்களை பாதுகாப்பதன் மூலமாகவும், வாஸ்குலர் திசுவைஆரோக்கியமாக பராமரிப்பதன் மூலமாகவும் இந்நோய் ஏற்படும் அபாயத்தை நீங்கள் குறைக்கலாம். ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் உணவுமுறை மாற்றங்களில் உட்படுவது:

- வழக்கமான அடிப்படையில் உடற்பயிற்சி
- ஆரோக்கியமான எடை பராமரிப்பு
- புகைப்பிடிப்பதை நிறுத்துவது
- சர்க்கரை நோயை கட்டுப்படுத்துவது
- இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவது
- உங்கள் கொலஸ்ட்ரால் அளவைக் குறைப்பது
- உங்கள் மருத்துவர் பரிந்துரைத்தால், ஆஸ்பிரின் அல்லது இதர இரத்த இளக்கிகளை எடுப்பது.

முறையான இடைவெளிகளில் கண் பரிசோதனை செய்து கொள்வது, எந்தவொரு கண் நோயையும் ஆரம்பத்திலேயே கண்டறிய உங்கள் மருத்துவருக்கு உதவும்.







## வி ஜி ஈ எஃப்-க்கு எதிரான இஞ்ஜெக்ஷன் தெரபி

ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷனைத் தொடர்ந்த மேக்யுலர் எடீமாவிற்கு இது ஒரு அங்கீகரிக்கப்பட்ட மருந்தாகும்.

## இது எவ்வாறு செயல்படுகிறது



ரெட்டினல் வெய்ன் ஆக்ளூஷனில், மேக்யுலாவிற்குள் ஒழுகும் இரத்தம் மற்றும் திரவம், வீக்கத்தை ஏற்படுத்துகிறது. மேக்யுலர் எடீமா எனப்படும் இந்நிலை, பார்வை மங்குதல் மற்றும்/அல்லது பார்வையிழப்பை ஏற்படுத்துகிறது.


வி ஜி ஈ எஃப்-க்கு எதிரான ஊசி, இரத்த நாளங்களிலிருந்து உண்டாகும் ஒழுகலை நிறுத்தி, மேக்யுலர் எடீமாவைக் குறைக்கிறது, அத்துடன் அதை தொடர்ந்து ஏற்படக்கூடிய பார்வையிழப்புக்கான அபாயத்தையும் குறைக்கிறது. மருந்தின் விளைவு ஒரு மாதம் அல்லது அதற்கதிகமாக நீடிக்கிறது, அதனால் நீங்கள் பெறும் ஊசிகளின் எண்ணிக்கை, உங்கள் நிலை மற்றும் உங்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பொறுத்திருக்கும்.

## நன்மைகள்

விஈஜிஎஃப்-க்கு எதிரான ஊசி உடனான சிகிச்சை, முக்கிய பார்வைத் தன்மைகளை (நிறம், ஒளிர்வு மற்றும் கூர்மைத்தன்மை) மற்றும் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், கார் ஓட்டுதல் போன்ற வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய பல்வேறு நடவடிக்கைகளை மேம்படுத்தலாம்.







**டிஸ்கிளெய்மர்:** இந்த் வெளியீடு தகவல் நோக்கத்திற்காக மட்டுமே. இது ஒரு மருத்துவர் அல்லது அரோக்கிய நல நிபுணரின் ஆலோசனை அல்லது அறிவுரைக்கு மாற்றாகாது. துல்லியமான மற்றும் சமயத்துக்கேற்ற தகவலை வழங்க நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறோம், ஆனால் இது தொடர்பாக எந்த உத்திரவாதமும் அளிக்கப்படாது. நீங்கள் உங்கள் கண் மருத்துவர் அல்லது ஆரோக்கிய நல நிபுணரின் ஆலோசனையைப் பெற்று அதன் படி நடக்க வேண்டும்.

INTAS

***INTAS PHARMACEUTICALS LIMITED***

Near Sola Bridge, S.G. Highway, Thaltej,
Ahmedabad – 380054, Gujarat, INDIA.
Website : www.intaspharma.com

RAZUMAB™
Ranibizumab 0.5 mg Injection